**செய்தி வெளியீடு எண்: 04/10/2021** **நாள்: 04.10.2021**

## பத்திரிக்கைச் செய்தி

## இன்று (04.10.2021) திருவொற்றியூர் மற்றும் விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்ற இலவச பொது சுகாதார மருத்துவ முகாம்களில் 278 நபர்கள் பயணடைந்தனர்

இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழாவின் (Azadi ka Amrut Mahostav) ஒரு பகுதியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஃபோர்டிஸ் மருத்துவமனையுடன் (Fortis Hospital) இணைந்து மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாம்கள் 20.09.2021 முதல் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்று வருகிறது.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் இன்று (04.10.2021) திருவொற்றியூர் மற்றும் விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையங்களில் காலை 10 மணி முதல் 12 மணி வரையிலும் மற்றும் மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும் நடைபெற்றது. மெட்ரோ பயணிகள், பொதுமக்கள் மற்றும் மெட்ரோ ஊழியர்கள் காலையில் 132 நபர்கள் மாலையில் 146 நபர்கள் உட்பட சுமார் 278 நபர்கள் இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில் இன்று பயனடைந்தனர்.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில்

1. பி.எம்.ஐ (உயரம் மற்றும் எடை)
2. இரத்த அழுத்தம்
3. சீரற்ற இரத்த சர்க்கரை
4. வெப்பநிலை
5. துடிப்பு போன்றவற்றிற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றிற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாம்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின்படி தொடர்ந்து நடத்தவிருக்கிறது.

| வ.எண் | தேதி | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 1 | 06.10.2021 (புதன்கிழமை) | உயர் நீதிமன்றம் மெட்ரோ<br>திருமங்கலம் மெட்ரோ | காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை மற்றும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை |
| 2 | 08.10.2021 (வெள்ளிகிழமை) | புது வண்ணாரப்பேட்டை மெட்ரோ<br>வடபழனி மெட்ரோ | |

மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் இந்த இலவச மருத்துவ முகாமை பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

***********************